Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages 

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

**சங்க உறுப்பினர்களே!**
**சங்கத்தில் தொடர்ந்து**
**ரினிவல் செய்து பயன்பெறுவீர்**

**- CVPA**

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 18 Click - 07
OCTOBER 2022 Re. 1

# கொரோனாவிற்கு பின்னர் நடந்த குடும்ப விழா. புதிய நிர்வாகம் மிகக் குறுகிய காலத்தில் சிறப்பான ஏற்பாடு என முன்னாள் தலைவர்கள் பாராட்டு







சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கத்தின் 27 ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் CVPA குடும்ப விழா, சென்னை காட்டுப்பாக்கம் AK மஹாலில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. கொரோனா தாக்கத்தில் இருந்து மீண்டு எழுந்தபின், நமது சங்கத்தின்புதியநிர்வாகிகளால்நடத்தப்படும்முதல் குடும்ப விழா இதுவாகும். பெரும்பான்மையான உறுப்பினர்களின் விருப்பத்தை ஈடேற்றும் வகையில், இந்த விழா அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடு மிகக் குறுகிய காலத்தில், புதிய நிர்வாகத்தால் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது. இதனால் இந்த விழா அனைவரும் பாராட்டும் வகையில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. குடும்பவிழா வழக்கமான இரத்ததான முகாம், மருத்துவ முகாம்,கண் பரிசோதனை முகாம், சித்தா வர்ம மருத்துவ முகாமுடன் சேர்த்து சங்க உறுப்பினர்கள் அனைவரும் பயன் பெரும் வகையில் இம்முறை புதியதாக நுரையீரல் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. குழந்தைகளின் கலை நிகழ்ச்சி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல் என குடும்ப விழா கலை கட்டியது.

முன்னதாக இவ்விழாவை சின்னத்திரை நடிகை பவித்ரா குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். மருத்துவ முகாம்களை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அருள் அன்பரசு துவக்கி வைத்தார். நமது சங்க உறுப்பினர்களின் மாணவச் செல்வங்களுக்கு திரைப்பட இயக்குனர் சரவண சுப்பையா கல்வி ஊக்கத்தொகை வழங்கி பாராட்டிப் பேசினார். இவ்விழாவில் அவர் பேசும் போது.

பிள்ளைகளுக்கு உங்கள் சங்கம் மூலமாக கல்வி ஊக்க தொகை வழங்கி, அவர்களை உற்சாகப்படுத்தி வருவதை பார்க்கும் போது, மற்ற சங்கங்களுக்கு இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக இருந்து வருகிறீர்கள். அதனால் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆயிரம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தர்மங்கள் யாவும்,
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி,
ஆங்கே ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

என்று பாரதி பாடினார். வெறும் எழுத்தறிவு மட்டும் போதாது. உங்கள் சங்கம் மூலமாக தனிப்பட்ட முறையில், நன்றாக படிப்பவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கி அவர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்துவது என்பதை மிகப்பெரிய விஷயமாக நான் பார்க்கிறேன். எல்லோருடைய கைகளும் சுத்தமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. இந்த பிள்ளைகளுக்கு என்னுடைய கைகளால் கல்வி ஊக்கத் தொகையை வழங்கியதால் என்னுடைய கைகள் இன்று சுத்தம் செய்யப்பட்டு இருக்கிறது. இதற்காக இந்த சங்கத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கல்வி ஊக்க தொகையில் என் பங்கும் சிறியதாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். எனவே என்னுடைய சிறிய பங்கையும் கல்வி ஊக்கத் தொகைக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்த சங்கம் தொடங்கி 27 ஆண்டுகளை எட்டிப்பிடிப்பது என்பது, ஒரு அசாத்தியமான விஷயம். இந்த அளவிற்கு உங்கள் பயணம் கடந்து வந்திருப்பது என்பது உங்கள் ஒற்றுமையையும், உங்கள் குடும்பத்தார் தந்த ஒத்துழைப்பும் மிக முக்கியமானது. இந்த சங்கத்தில் 6 ஆயிரம் உறுப்பினர்கள் என்பது சாதாரண விஷயம் இல்லை பெப்சியில் கூட இதே அளவு எண்ணிக்கை உள்ளது. ஆனால் இங்கே இருக்கின்ற ஒற்றுமை அங்கெல்லாம் இருக்குமா என்பது எனக்கு தெரியவில்லை. உங்கள் ஒவ்வொருவரையும் பார்த்து நான் பொறாமை படுகின்றேன். சங்க நிர்வாகிகள் அனைவரும் ஒற்றுமையுடன் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியை நான் வந்த வழியெல்லாம் காண முடிந்தது. நான் ஒரு சாதாரண சினிமா இயக்குனர்தான். ஆனால் இயக்குனர் என்கிற ஒரு அந்தஸ்து மட்டுமே என்னை இந்த இடத்தில் கொண்டு வந்து நிறுத்தி உள்ளது. அதைவிட அதிகமான உயரத்தில் இந்த சங்க நிர்வாகிகள் இருக்கின்றார்கள். இவர்கள் செய்த தொண்டின் காரணமாக இவ்வளவு பெரிய தொகை சேர்த்து, அதை எடுத்து எல்லோருக்கும் கொடுக்க முடிகிறது. இந்தத் தொகை இன்னும் அதிகமாக வேண்டும் என்று விரும்புகிறேன். ஒரு கோவிலை தேடி போகும்போது ஒரு வழிப்போக்கன்தான் கோவிலுக்கான வழியை சரியாக சொல்லுவான் அது போல நான் இங்கே வருவதற்கு மிக முக்கிய காரணமாக என்னுடைய உதவி இயக்குனர் ரகுபதி அவர்கள் இருந்துள்ளார். அவருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி ஒரு அரிய வாய்ப்பை வழங்கிய உங்கள் அனைவரின் பாதம் தூற்று விடை பெருகின்றேன் நன்றி வணக்கம்.

சென்னை மாவட்ட முன்னாள் தலைவர், மாநில சங்கத்தின் துணைத் தலைவர் சரவணன் பேசுகையில்...

நமது சங்கமானது 27 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைத்து அதன் தொடக்க விழாவுடன் குடும்ப விழாவையும் சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நமது சங்கம் 6 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட சங்கமாக இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. நான் மாநில சங்கத்தின் துணைத் தலைவராக இருந்து பல்வேறு மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து வருகிறேன். நமது சங்கத்தைப் போல அழகான கட்டமைப்பை கொண்ட மாவட்ட சங்கங்களாக ஒரு நான்கு மாவட்ட சங்கத்தை மட்டுமே என்னால் பார்க்க முடிந்தது. இதில் நமது சென்னை மாவட்ட சங்கமே முதன்மையாக உள்ளது. உறுப்பினர்களின் நலம் காக்க முதன் முதலில் இன்சூரன்ஸ் திட்டத்தை அமல்படுத்திய மாவட்ட சங்கம் நமது சென்னை மாவட்ட சங்கம் என்பதில் பெருமையாக உள்ளது. சங்க உறுப்பினர்களை மேம்படுத்த அதிக அளவில் பயிற்சி வகுப்புகள் நடத்திய மாவட்ட சங்கமும் சென்னை மாவட்ட சங்கம்தான். எனவே இந்த சங்கத்தில் ஒரு அடிப்படை உறுப்பினராக இருப்பதில் நான் பெருமைப் படுகின்றேன். 2019 க்கு பிறகு கொரோனா காலமாக இருந்ததால் இந்த குடும்ப விழா நடத்த முடியாமல் போனது. மிகக் குறுகிய காலத்தில் இந்த விழாவினை புதிய நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கின்றார்கள் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் சங்க இணைச் செயலாளர் பொருளாளர், தலைவர், செயலாளர் துரைபாபு பேசுகையில்... நினைவில் வாழும் ரவிச்சந்திரன் அவர்களின் ஆசியோடு இன்றைய விழா சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இன்றைய நிர்வாகம் மிகக் குறுகிய காலத்தில் இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஒளிப்படக் கலைஞர்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கத்தில்தான் 1996 ஆம் ஆண்டு இந்த சங்கம் அன்று தொடங்கப்பட்டது. அன்றைய தினம் நமது கலைஞர்களிடம் ஒற்றுமை என்பது மிகக் குறைவாகவே இருந்தது. இந்த சங்கம் தொடங்கிய பிறகு தான் அது சரியானது. மாப்பிள்ளை வீட்டுக்கு போட்டோ எடுத்தாலும் சரி, அல்லது பெண் வீட்டாருக்கு போட்டோ எடுத்தாலும் சரி இன்று ஆப்போசிட் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம் ஒருவருக்கு ஒருவர் கேமராவை கொடுத்து உதவி கொள்ளும் அளவிற்கு ஒற்றுமை உயர்ந்திருக்கிறது. வியாபார பரிமாற்றம் நன்றாகவே இருக்கிறது. எனவே இந்த சங்கத்தில் எல்லோரும் உறுப்பினர்களாக இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு நடிகை ஜெயந்தி குமரன் பரிசுகளை வழங்கி வாழ்த்தி பேசினார். மேலும் நம் குடும்ப விழாவில் திரைப்பட நடிகரும், புகைப்பட கலைஞருமான தாஸ் சாந்தகுமார் அவர்களும், நடிகர் நவீன் குமார் அவர்களும் நடிகர் ஜாஸ்பர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தலைவர் செல் செல்வம், செயலாளர் DM.பிரேம்குமார், பொருளாளர் ஜெயபால், பிஆர்ஓ ரவிக்குமார், துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள், மற்றும் பகுதி செயலாளர்களின் ஒத்துழைப்போடு குடும்ப விழா மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது அனைவருக்கும் மகிழ்ச்சி அளித்தது.

## கல்வி ஊக்கத் தொகை பெற்ற மாணவர்களுடன் முன்னாள், இந்நாள் சங்க நிர்வாகிகள்





## குடும்பவிழா நன்கொடையாளர்கள் அனைவருக்கும் நன்றி!

| | |
|---|---|
| NEW SILVER COLOUR LAB | 20000 |
| P. GOWRI-UNIVERSAL | |
| DIGITAL STUDIO & COLOR LAB | 10000 |
| SRI DIGITAL SOLUTION | 10000 |
| PUSHPA VISUALS - MANDAVELI | 10000 |
| M.S.VIDEO - K.PARAMASIVAM | 10000 |
| CINTHAMANI COMPUTER | 10000 |
| METRO VIDEO - K. JAYAKUMAR | 10000 |
| SREE FOTO'S - D. BABU | 10000 |
| BABU RAM | 10000 |
| M. VELMURUGAN-CENTRAL VP | 5000 |
| SAFETY PHOTOGRAPHY | 5000 |
| SLR COLOUR LAB-P.DURAI BABU | 5000 |
| YOGA SAVITH PHOTO CENTRE | 5000 |
| R.S.VIDEO - R. SUNDARAVADIVEL | 5000 |
| 3 CHANNEL - G.JAMMY | 5000 |
| G.K.VIDEO & PHOTO - G.KANNAN | 5000 |
| MR.GUNASEKAR-EX MC K.K. NAGAR | 5000 |
| REDSUN AMBIGAPATHY (FAST TRACK) | 5000 |
| VIDEO CORNER - | |
| MR.SREERAM (MANDHAVELI) | 5000 |
| CHANDRA ELECTRICALS - | |
| MR.SARAVANAN (T.NAGAR) | 5000 |
| RATHI STUDIO - S. DIVESH RATHI | 5000 |
| SOPAS VIDEO & STUDIO - L.N.SOPAS AMBALAM | 5000 |
| ANGEL PHOTOS - K.S. EZHIL ANAND-OLD | |
| WASHERMENPET | 5000 |

| | |
|---|---|
| LIONS VIDEO ELECTRONICS | 5000 |
| SURESH GIRRI VIDEOS- MYLAPORE | 5000 |
| MR.KIRUBANANDAN.M.G | 5001 |
| SUGAM DIGITAL PRESS - TAMBARAM | 5000 |
| DONANATION FROM | |
| THIRUVANMIYUR AREA - | |
| M. BASILICA ANTONY | 5000 |
| THIRUVANMIYUR AREA SECRETARY | |
| MR.SOMESH - ID NO:94 | 5000 |
| P. DEVANAND - MOTHER STUDIO | 5000 |
| HARI VIDEO CENTRE - S. CHITTIBABU | 5000 |
| CHANDRA VIDEO'S & NS LED DISPLAY | 5000 |
| A. ELANGOVAN | 5000 |
| J. RADHAKRISHNAN - VELACHERY AREA SECRETARY | 5000 |
| R. DHILIP KUMAR - PATTALAM AREA SECRETARY | 5000 |
| PRABHA VIDEO - NORTH JOINT SECRETARY | 5000 |
| R. DHANAKOTTI - CENTRAL JOINT SECRETARY | 5000 |
| ARUN DIGITAL STUDIO | 3000 |
| G.M.VIDEOS - R.MUTHIAH | 3000 |
| MUTHU DIGITAL STUDIO - K.K NAGAR | 3000 |
| RAVI TRAVELS | 3000 |
| STAR LAMINATION - THIRUVOTTIYUR | |
| NORTH MADRAS | 3000 |
| ARUN VIDEO & STUDIO | 3000 |
| PRISM VIDEO | 2500 |
| RESEARCH VIDEOS - S.BASKARAN | 2500 |
| MR.SHARAVANAN SUBBAIYA - DIRECTOR | 2500 |

| | |
|---|---|
| K. SHANMUGAM - THOUSAND LIGHT AREA | |
| SECRETARY | 2500 |
| FOTO LAND - ADAMBAKKAM | 2500 |
| S. RAJAN-VILLIVAKKAM AREA SECRETARY | 2000 |
| K.R.VIDEO - RAJAN SAIDAPET | 2000 |
| D4 COLOUR LAB | 2000 |
| A. JOHN NICHOLAS | 2000 |
| MAAYAAVEE CREATION | 2000 |
| SRI VENKATESHWARA DIGITAL STUDIO - | |
| AMINJIKARAI | 2000 |
| GM SEENU ALBUM - CHENNAI-7 | 2000 |
| L. JOHN STEPHEN - PALLAVARAM AREA | |
| SECRETARY | 2000 |
| E. VIJAYAKUMAR - CHROMPET AREA SECRETARY | 2000 |
| C. PALANI PAULRAJ - | |
| SHOLINGANALLUR AREA SECRETARY | 2000 |
| R. BABUJI - TAMBARAM AREA SECRETARY | 2000 |
| MR.VARADHAN - VARADHAA'S PHOTOGRAPHY | 2000 |
| KARTHIK PHOTO STORES | 1000 |
| MR. RAMESH - K.K NAGAR | 1000 |
| VMR STUDIO - MURALI KODAMBAKKAM | 1000 |
| MAX STUDIO - KOSAPET DAKSHINAMOORTHY | 500 |
| G.BALA KRISHNAN - MADIPAKKAM | 500 |
| INDOT | STALL |
| EDUCATION FUND | 10000 |

## நன்றி! நன்றி!! நன்றி!!!





CVPA குடும்ப விழா நடத்த ஏதுவாக திருமண மண்டபங்களை சங்க நிர்வாகிகள் தேடிக் கொண்டிருந்தபோது, தேனாம்பேட்டை பகுதி செயலாளர் TM.ரவி @ சங்கர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அருள் அன்பரசு அவர்கள் காட்டுப்பாக்கத்தில் இருக்கும் தன்னுடைய AK மஹால் மண்டபத்தை, CVPA குடும்ப விழா நடத்த இலவசமாக (EB மற்றும் கிளீனிங் சார்ஜ் நீங்கலாக) வழங்குவதாக அறிவித்தார். அதன் அடிப்படையில் குடும்ப விழாவிற்கான ஏற்பாடுகள் மிகக் குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்டு அனைவரிடமும் பாராட்டைப் பெற்றன. இதற்காக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அருள் அன்பரசு அவர்களுக்கும், தேனாம்பேட்டை பகுதி செயலாளர் TM ரவி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். நமது குடும்ப விழாவில் எப்போதும் கேட்டரிங் மிக முக்கிய பங்கு வகிக்கும். நமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், மாநில சங்கத்தின் துணைத் தலைவருமாகிய **S.சரவணன்** அவர்களின் ஏற்பாட்டின் பேரில், மிக மிக குறைந்த செலவில் இந்த குடும்ப விழாவில் அனைவருக்கும் தரமான அறுசுவை உணவு வழங்கப்பட்டது. மாநில சங்க துணைத் தலைவர் சரவணன் அவர்களுக்கு நிர்வாகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். குடும்ப விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களை அழைத்து வந்த மத்திய சென்னை துணைத் தலைவர் வேலு அவர்களுக்கும், திருவொற்றியூர் பகுதி செயலாளர் மேகநாதன் அவர்களுக்கும், தேனாம்பேட்டை பகுதி செயலாளர் TM.ரவி அவர்களுக்கும், முன்னாள் பகுதி செயலாளர் ஜான் நிக்கோலஸ் அவர்களுக்கும், ஜோசியம் ஏற்பாடு செய்து கொடுத்த கே கே நகர் பகுதி செயலாளர் திருமலை அவர்களுக்கும், Stage Back Drop LED WALL அமைத்துக் கொடுத்த எஸ்.கே.வீடியோ சீனு அவர்களுக்கும், புகைப்படம் ஏற்பாடு செய்து கொடுத்த செல்.செல்வம் அவர்களுக்கும், வீடியோ கவரேஜ் மற்றும் லைவ் ஸ்ட்ரீமிங் (www.cvpa.in) ஆவடி பாபு அவர்களுக்கும், யூடியூப் மற்றும் பேஸ்புக்கில் லைவ் ஸ்ட்ரீமிங் செய்து கொடுத்த VR2 N. ரவிக்குமார் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மருத்துவ முகாம் ஏற்பாடு செய்து கொடுத்த கார்த்திக் போட்டோஸ் சைதை கண்ணன் அவர்களுக்கும், ஜாபர்கான் பேட்டை சரிதா ஸ்டுடியோ சம்பத் அவர்களுக்கும், மேஜிக் ஷோ ஏற்பாடு செய்து கொடுத்த தென் சென்னை-1ன் இணைச்செயலாளர் செந்தில் குமார் அவர்களுக்கும் நன்றியை காணிக்கையாக்குகின்றோம்.

# குடும்பவிழா கொண்டாட்டம்








சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கும் புதியதாக உறுப்பினராக இணைபவர்களுக்கும், ரினிவல் செய்பவர்களுக்கும் சங்கத்தின் சார்பாக QR கோடுடன் கூடிய அழகிய அடையாள அட்டை, ரோப்புடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள் அனைவரும் இதை பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம் - CVPA.



வட சென்னை பகுதியின் மூத்த உறுப்பினர், சுபாஷினி ஸ்டுடியோ மல்லீஸ்வரன் அவர்களின் இல்ல திருமண விழாவில் CVPA செயலாளர் DM. பிரேம்குமார், பொருளாளர் ஜெயபால் ஆகியோர் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்கள் பூஜா-ராஜ்குமாரை வாழ்த்தினார்கள்.



வேளச்சேரி பகுதியை சார்ந்த நமது சங்க உறுப்பினர் லோகநாதன் அவர்களின் இல்ல திருமண விழாவில் CVPA தென் சென்னை 2ன் துணைத் தலைவர் ஜெயக்குமார், தென் சென்னை 2ன் இணைச்செயலாளர் ஆசான் சக்தி, வேளச்சேரி பகுதி செயலாளர், ராதாகிருஷ்ணன் ஆகியோர் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்கள் செந்தில்குமார்- விஜயலட்சுமியை வாழ்த்தினார்கள்.



தேனாம்பேட்டை பகுதியைச் சேர்ந்த CVPA வின் உறுப்பினரும், சந்துரு போட்டோகிராபி உரிமையாளர் E. சந்திரசேகர் - P. ராஜேஸ்வரி இவர்களின் திருமணம் நடைபெற்றது. பகுதியின் சார்பாக R.சீனிவாசன் துணைத்தலைவர் S1, T. செந்தில்குமார் இணை செயலாளர் S1, T.M ரவி, பகுதி செயலாளர், P.C. பழனிவேலு, பகுதி செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் நேரில் சென்று வாழ்த்தினர்.



நமது சங்கம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கார்களில் CVPA ஸ்டிக்கரை ஒட்டி சங்க நிர்வாகிகள் தொடங்கி வைத்த போது.



வடசென்னை உறுப்பினர் திரு.குமார் அவர்களின் மகள் தேஜாஸ்ரீயின் மஞ்சள் நீராட்டு விழா நிகழ்ச்சியில் வடசென்னை துணைத்தலைவர் அ.கௌஸ் பாஷா வட சென்னை இணை செயலாளர் திரு. பிரபாகரன் வண்ணாரப்பேட்டை பகுதி செயலாளர் திரு. குமார் மற்றும் உறுப்பினர் அனைவரும் கலந்து கொண்ட போது.



வடசென்னை, தண்டையாளர்பேட்டை பகுதி உறுப்பினர் ஜெகநாதன் அவர்களின் புதுமனைபுகுவிழாவிற்கு வடசென்னை துணைத் தலைவர் அ. கௌஸ்பாஷா மற்றும் இணைச் செயலாளர் பிரபாகரன் சங்க உறுப்பினர் மாதா முத்து கிஷோர் ஆகியோர் CVPA சார்பாக கலந்துகொண்டார்கள்.



மத்திய சென்னை திருவல்லிக்கேணி பகுதியை சார்ந்த நமது உறுப்பினர் திரு R. செந்தில்குமார் அவர்களின் மகன் வித்யுத் மாநில அளவிலான ஜூடோ போட்டியில் தங்கப் பதக்கம் வென்று சாதனைபடைத்துள்ளார் மேலும் அடுத்து நடக்க இருக்கும் தேசிய அளவிலான போட்டியில் பங்கு பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளார் தங்கம் வென்ற நமது சங்கத்தை சார்ந்த தங்கத்திற்கு நமது CVPA நிர்வாகத்தின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் மென்மேலும் பல சாதனைகளை புரிய நமது ஆசிர்வாதத்தை தெரிவிப்போம்



CVPA முன்னாள் தலைவரும், TVPA வின் துணைத் தலைவருமான எஸ்.சரவணன் அவர்களின் மகள் சண்முகப்பிரியா சென்னை எத்திராஜ் காலேஜில் நடைபெற்ற கோமீட் 2022-2023 சார்பாக நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டு ப்ராடக்ட் போட்டோகிராபியில் மூன்றாம் இடம் பிடித்துள்ளார். அவருக்கு நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.10.2022

To